# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் : 982 / 2012)

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



உலகில் உள்ள மிகப்பெரிய உயர்கல்வி அமைப்புள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. நம் நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிகமான உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் உள்ளன. இந்தியாவின் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) GER - 27.01%. தமிழ்நாட்டின் GER - 51.04% ஆகும். இந்தியாவில் GER - விகிதத்தில் இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. பள்ளிக் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குடும்ப வறுமையின் காரணமாக ஏராளமான மாணவர்கள் இன்னும் உயர்கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கின்றனர். தமிழகத்தில் வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள் உயர்கல்வியில் முன்மாதிரி மாவட்டங்களாக விளங்க வேண்டுமென்பது என் விருப்பம். நமது மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து ஏழை எளிய மாணவர்களும் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டுமுதல் **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த 2012 ஆம் ஆண்டு குடியாத்தம் மற்றும் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிகளில் மேல்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்த தகுதிவாய்ந்த ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவி செய்தோம், பின்பு படிப்படியாக விரிவுப்படுத்தி 2015-16 ஆம் கல்வியாண்டுமுதல் வேலூர் மாவட்டத்திலுள்ள 20 ஒன்றியங்களிலும் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் தேர்ச்சிப்பெற்ற தகுதிவாய்ந்த ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற உதவி செய்து வருகிறோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உயர்கல்வி அளித்துவிட்டால், அவர் படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன்னுடைய சகோதர, சகோதரிகளைப் படிக்க வைத்து, ஒவ்வொரு குடும்பமும் முன்னேறும்போது உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், மாவட்டத்தின் வளர்ச்சியும் ஒரு சேர உயரும் என்பது என் நம்பிக்கை. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெற்றவர்களில் 3-இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் குழந்தைத் திருமணங்களும், வளர் இளம்பெண்கள் குழந்தை பெறுவதும் வெகுவாகக் குறைந்து வருகிறது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை போன்று தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களும் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவி செய்யத் தொடங்கிவிட்டால் தமிழ்நாடு உயர்கல்வியில் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக விளங்கும்.

## அறக்கட்டளையின் செயல்பாடுகள்

- உயர்கல்வியின் தேவை மற்றும் சிறப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சிப்பெற்ற, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயிலக் கல்வி உதவித்தொகை வழங்குதல்.
- இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து, வேலை வாய்ப்புக்கான தகுதிகளை மேம்படுத்துதல்.
- இளைஞர் சமுதாயத்தை ஒரு திறன்மிக்க ஆற்றல் வாய்ந்த மனிதவளமாக உருவாக்குதல்.

## "HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

இத்திட்டம் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 6,824 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றிப் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி செவிலியர் கல்லூரியும் இணைந்து அக்கல்லூரியில் பயிலும் செவிலியர் பயிற்சி மாணவிகளுக்கு 20.02.2021 அன்று ஒரு நாள் ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தன. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினரும் லட்சுமியம்மாள் கல்வி அறக்கட்டளைத் தலைவருமான திரு. பாலாஜி லோகநாதன் அவர்கள் தலைமை வகித்தார். இதில் SWF Trust - தலைவரும் தொழில் & தலைமைப் பண்புப் பயிற்சியாளருமான திரு. வி.ஜே. இரமேஷ் அவர்கள் கலந்துகொண்டு மாணவிகளுக்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்த திறமையை வளர்த்துக்கொள்வது குறித்துப் பயிற்சி அளித்தார். வாழ்வியல் பயிற்சியாளர் திருமதி. பாத்திமா அவர்கள் கலந்துகொண்டு, மாணவிகள் வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்துப் பயிற்சி அளித்தார். இதில் 200 மாணவிகள் பங்குப் பெற்றனர். கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.



தினத்தந்தி 25.02.2021

ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரியில்

ஆளுமை வளர்ச்சி மேம்பாடு சிறப்பு பயிற்சி

★★★★ ★★★★ ★★★★



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் வாலாஜாவில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியும் இணைந்து அக்கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு 10.03.2021 அன்று ஒரு நாள் ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தன. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர் திரு. ஜே. லட்சுமணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவிகளை ஊக்குவித்துப் பேசினார். இதில் SWF Trust - தலைவரும் தொழில் & தலைமைப் பண்புப் பயிற்சியாளருமான திரு. வி.ஜே. இரமேஷ் அவர்கள் கலந்துகொண்டு மாணவிகளுக்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்த திறமையை வளர்த்துக் கொள்வது குறித்துப் பயிற்சி அளித்தார். வாழ்வியல் பயிற்சியாளர் திருமதி. பாத்திமா அவர்கள் கலந்துகொண்டு மாணவிகள் ஆளுமை & வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்துப் பயிற்சி அளித்தார். இதில் கல்லூரி இறுதியாண்டு படிக்கும் 300 மாணவிகள் பங்குப் பெற்றனர். கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வு



**'HEARTS'** (**H**igher **E**ducation for **A**ll to **R**ealize **T**ransformation of the **S**ociety) **திட்டம்** வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. கடந்த 19.03.2021 அன்று ஜவ்வாதுமலை ஒன்றியத்திற்குட்பட்ட அத்திப்பேட், செயிண்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வு நடத்தியது. செயிண்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளித் தாளாளர் அருட்சகோ. ஆரோக்கியம் அவர்கள் தலைமை வகித்தார். இதில் தொழில் சார்ந்த படிப்புகள், உயர்கல்வி பயிலும்போது தொழில்சார்ந்த திறன்களை வளர்த்துக் கொள்வது குறித்து SWF Trust தலைவரும் தொழில் & தலைமைப் பண்புப் பயிற்சியாளருமான திரு. வி.ஜே. இரமேஷ் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். உயர்கல்வியின் தேவை குறித்து வாழ்வியல் பயிற்சியாளர் திருமதி. பாத்திமா அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். இதில் 400 மாணவர்கள் பங்குப் பெற்றனர்.



# கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

**வே. சுப்பிரமணி**



திருப்பத்தூர் மாவட்டம், கிரிசமுத்திரம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய தந்தை தோல் தொழிற்சாலையில் காவலாளியாக வேலை செய்கிறார். என்னுடைய குடும்பம் பொருளாதார வசதியில்லாத குடும்பம். நான் 12 ஆம் வகுப்புவரை என்னுடைய கிராமமான கிரிசமுத்திரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயின்றேன். 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 939 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரியில் பி.எஸ்.சி. இயற்பியல் பாடப் பிரிவில் சேர்ந்தேன். என்னுடைய குடும்பத்தில் நான் முதல்தலைமுறைப் பட்டதாரி மாணவன், கல்லூரியில் சேர்ந்ததும் உயர்கல்வி பயில உதவித்தொகை வேண்டி அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்து என்னுடைய குடும்பப் பொருளாதாரச் சூழலை விசாரித்து எனக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். நான் பி.எஸ்.சி. இயற்பியல் படித்த மூன்று ஆண்டுகளுக்கும் எனக்கு உதவித்தொகை வழங்கி என்னுடைய உயர்கல்விக் கனவை நிறைவேற்றினார்கள். அறக்கட்டளை வழங்கிய உதவித்தொகை நான் கல்லூரிப் படிப்பை முடிக்கப் பேருதவியாக இருந்தது. தற்போது படிப்பு முடித்து TVS Hosur-இல் பணிபுரிகிறேன். அறக்கட்டளைக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி. மோனிஷா**



என்னுடைய அப்பா என் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். என்னுடைய அம்மா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். குடியாத்தம் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்புப் படிப்பு முடித்து, குடியாத்தம் கே.எம்.ஜி. கல்லூரியில் பி.சி.ஏ. பாடப்பிரிவில் சேர்ந்தேன். பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்கி வருவதை அறிந்து நான் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளை நேர்முகத்தேர்வுக்கு அழைத்து குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைதந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாகப் பார்த்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். நான் கல்லூரி படிப்பு முடித்ததும், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் சென்னையில் உள்ள ஆஸ்பயர் சிஸ்டமும் இணைந்து விஜடி வளாகத்தில் நடத்திய நான்கு மாதகால தகவல் தொழில்நுட்பப் பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சிப் பெற்றேன். தற்பொழுது பயிற்சி முடித்து வேலூரில் உள்ள AGS Health Care Pvt. Ltd-இல் Pre Billing பிரிவில் பணிபுரிகிறேன். என்னுடைய உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அறக்கட்டளைக்கு நன்றி.

**ச. யோகேஷ்**



காட்பாடி அடுத்த பிரம்மபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய குடும்பம் பொருளாதார வசதியில்லாத குடும்பம். என்னுடைய அப்பா வீட்டினருகேயே பெட்டிக்கடை வைத்துள்ளார். நான் காங்கேயநல்லூரில் உள்ள TMKV அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிப்பு முடித்து குடியாத்தம் ராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரியில் DME பாடப்பிரிவில் சேர்ந்தேன். கல்லூரியில் சேர்ந்ததும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையை அணுகி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். என் குடும்பப் பொருளாதாரச் சூழலை விசாரித்து என் கல்லூரிப் படிப்புக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இந்த உதவித்தொகை என்னுடைய கல்லூரிப் படிப்புக்கு மிகவும் உதவியாக இருந்தது. இப்பொழுது படிப்பு முடித்து சோளிங்கரில் உள்ள Breaks India Pvt. Ltd-இல் பணிபுரிகிறேன்.

**ரா. அஷ்வினி**



திருப்பத்தூர் மாவட்டம், மடவாளம் கிராமத்தில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 941 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். என்னுடைய அப்பா கைத்தறி நெசவு வேலை செய்கிறார். நான் 12 ஆம் வகுப்பு படிக்கும்போது என்னுடைய பள்ளிக்கு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அலுவலர்கள் வருகை தந்து 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிய விழிப்புணர்வு அளித்தனர். பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர். நான் 12 ஆம் வகுப்பு முடித்துத் திருப்பத்தூரில் உள்ள தூய நெஞ்சக் கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்து அறக்கட்டளையின் உதவி பெற்றுக் கல்லூரிப் படிப்பை முடித்ததும், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் சென்னையில் உள்ள ஆஸ்பயர் சிஸ்டமும் இணைந்து விஜடி வளாகத்தில் நடத்திய நான்கு மாதகால தகவல் தொழில்நுட்பப் பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சிப் பெற்றேன். தற்பொழுது பயிற்சி முடித்து, சென்னையில் உள்ள Accenture மென்பொருள் நிறுவனத்தில் Business Operations Associate ஆகப் பணிபுரிகிறேன். என்னுடைய உயர்கல்விப் படிப்புக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர் : 6,824

- இவர்களில் 4,505 (66%) பெண்கள்.
- 4,633 (67.89%) முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள்.
- 6,356 (93.14%) கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் செவிலியர் படிப்புப் படிக்கும் மாணவர்கள் அதிகமாகப் பயன் பெற்றிருக்கிறார்கள்.
- 6,196 (90.8%) மாணவர்கள் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றவர்கள்.
- 16.04% தாய்/தந்தை இழந்த பயனாளிகள்.
- 81% மாணவர்கள் +2 இல் 80% க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமின்றிக் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும், அறக்கட்டளை அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவி வருகிறது.
- இதுவரை 3,999 மாணவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள்;
  - 1,327 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.
  - 731 மாணவர்கள் முதுகலைப் படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகிறார்கள்.

## அறக்கட்டளை உறுப்பினர்கள்



**இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.**

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 224 7777, 220 2196

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore Dt. - 632 014.
Swift Code : IDIBINBBTSY
IFSC Code : IDIB000V086

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**

**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**